www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

## தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்


6

மகாவம்சமும், அதன் அடிப்படையில் இன்றைய பௌத்த சிங்களவர்களும் தங்களது மிகப்பெரிய வரலாற்றுத் தொன்மை மிக்க தலைநகரம் என்று சொல்கின்ற அனுராதபுரம், ஒரு பௌத்த தலைநகராக இருந்த தென்பது உண்மையே. ஆனால் அது ஒரு முற்று முழுதான சிங்களத் தலைநகர் என்பதில் உண்மையில்லை.

அண்மையில் அனுராதபுரத்தில், அதன் புராதன இராஜதானி அமைந்திருந்த பகுதியில் 'சிரான் தெரணியகல' என்ற சிங்களத், தொல்லியலாளரால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின்போது கிடைத்த பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள், மற்றும் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்த தமிழுக்கு மட்டுமுரிய தென் பிராமி எழுத்துக்கள் என்பன அங்கே தமிழர்கள் வாழந்ததற்கான சான்றாதாரங்களாக அமைந்தன. இவற்றை ஆராய்ந்த தெரணியகல இவற்றின் காலம் கி.மு. 8 ஆம் நூற்றாண்டு என நிர்ணயித்தார். இந்தக் கால நிர்ணயத்தை சிங்கள இனவாதக் கருத்தியலையுடைய ஏனைய சிங்கள வரலாற்றாசிரியர்கள் பலர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அத் தொல் பொருட் சின்னங்களிலிருந்த எழுத்துக்கள் தமிழ் நாட்டுத் தொடர்புடையவை என்பதை ஏற்றுக் கொண்டார்கள். *(1)*

### அனுராதபுரத்தில் தமிழர்கள்

தேவநம்பிய தீசனுக்குப் பின் வந்த 200 வருட காலத்தில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த 22 மன்னர்களில் 10 பேர் தமிழர்கள் என மகாவம்சம் சொல்கிறது. இவர்களை தமிழகத்திலிருந்து வந்த படையெடுப்பாளர்களாகவே மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஆனால் மகாவம்சத்தை போன்று வெறும் இலக்கியச் சான்றை மட்டும் கொண்டிராமல் தெளிவான வரலாற்றைக் கொண்ட தமிழக வரலாற்றில் மகாவம்சம் குறிப்பிடும் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட மூவேந்தர் காலத்தில் இலங்கை மீது அவர்கள்



புராதன வழிபாட்டு முறை

படையெடுப்பு நிகழ்த்தியதற்கான எந்தச் சான்றுகளும் இல்லை.

மாறாக அனுராதபுர காலத்தில் அங்கு மட்டுமல்ல, அதற்குத் தெற்கிலும் வடக்கிலும் கூட பல தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கதிர்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2 ஆம் 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில கல்வெட்டுக்கள் பத்துச் சகோதரர்களுடைய ஆட்சி பற்றிக் குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்துடன் தொடர்புடையவை என்றும், பாண்டியரின் இலட்சினையான மீன் இலட்சினை பொறிக்கப்பட்டவை என்றும் அதிலுள்ள மஜ்ஜி(மீன்) பண்டு, பழைய, புலைய என்கின்ற பெயர்களும் பாண்டிய




ஆதிகால திராவிட குடியிருப்புகள்

வம்சத்தவர்களைக் குறிக்கும் இனக் குழுப் பெயர் என்றும் தமிழ் வரலாற்றாசிரியர்கள் நிறுவியுள்ளார்கள்*(2)*. மகாவம்சம் இவர்களை கதிர்காமச் சத்திரியர்கள் என்றே, குறிப்பிடுகின்றது. சிங்கள வரலாற்றாசிரியரான பரணவிதான இவர்களை வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறி ஆட்சி அமைத்த ஆரியப் பிராமணர்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

**கதிர்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2 ஆம் 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில கல்வெட்டுக்கள் பத்துச் சகோதரர்களுடைய ஆட்சி பற்றிக் குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்துடன் தொடர்புடையவை என்றும் பாண்டியரின் இலட்னையான மீன் இலட்சினை பொறிக்கப்பட்டவை என்றும் அதிலுள்ள மஜ்ஜி[மீன்] பண்டு பழைய, புலைய என்கின்ற பெயர்களும் பாண்டிய வம்சத்தவர்களைக் குறிக்கும் இனக் குழுப் பெயர் என்றும் தமிழ் வரலாற்றாசிரியர்கள் நிறுவியுள்ளார்கள்**


ஆனால் இந்தக் கதிர்காமக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் சகோதர வாரிசு உரிமை என்பது சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் குறிப்பிடப்படும் அக்கால தமிழகத்தில் நிலவிய வாரிசுரிமை முறையை ஒத்ததென்றும், வட இந்திய அரசர்களிடமும் ஆரிய பிராமணர்களிடமும் இருப்பது தந்தை வழி அதாவது தந்தை மகன் வாரிசுரிமை என்றும் அதனால் கதிர்காமக் கல்வெட்டுக்கள் குறிப்பது தமிழர்களையே என்றும் இன்று நிறுவப்பட்டுள்ளது.

### அனுராதபுரத்தில் பரதவர் ஆட்சி

சேன, குந்திக (கி.மு.177 - 155) என்ற இரண்டு குதிரை வர்த்தகர்களே அனுராதபுரத்தின் முதலாவது தமிழ் அரசர்களாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவர்கள் அங்கு ஆட்சி செய்த சூள தீசன் என்ற சிங்கள மன்னனை வெற்றி கொண்டு 22 வருடங்கள் ஆட்சி செய்ததாக அதுவும் நீதி தவறாது ஆட்சி செய்ததாக மகாவம்சத்தில் சொல்லப்படுகின்றது. பரணவிதான உட்பட பெரும்பாலான சிங்கள வரலாற்றாசிரியர்கள் இவர்கள் அரசு சார்பற்ற முறையில் வந்த தமிழ் நாட்டுப் படையெடுப்பாளர்கள் எனக் குறிப்பிட்டனர். ஆனால் சுதர்சன் செனவிரட்ன என்ற இன்னொரு சிங்கள வரலாற்றாசிரியர் சங்க இலக்கியத்தில் பரதவர்கள் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு, இவர்கள் தமிழ்நாட்டிலிருந்த பரதவ குலத்தவர்கள் என்று கூறினார்*(4)*. பரதவர் குலம் என்பது தமிழகத்தில் மட்டுமல்லாது இலங்கையிலும் சம காலத்தில் வாழ்ந்து வந்தது என்பதற்கு தொல் பொருள் சான்றுகள் உண்டு. இலங்கையில் கிடைத்த கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குரிய 21 பிராமிக் கல்வெட்டுக்களில் இந்தக் குலம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அனுராத புரத்தில் கிடைத்த தமிழ் வணிகன் பற்றிய கல்வெட்டில் 'ஈழ பரத' என்ற பெயர் காணப்படுகிறது. இது தமிழக பரதவர்களில் இருந்து இலங்கைப் பரதவர்களை வேறு படுத்த ஈழ என்ற பதம் பாவிக்கப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர் *(5)*.

### பௌத்தத்திற்கு எதிரான ஆட்சி

உண்மையான வரலாற்றுச் சான்றாதாரங்களின் அடிப்படையில் அனுராதபுர ஆட்சியின் தொடக்க காலத்தில் அங்கு இன அடிப்படையிலான எந்த முரண்பாடும் அங்கே இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மத முரண்பாடு என்பது அங்கே தீவிரமாக இருந்தது. அதாவது திராவிட மக்களுக்குரிய பூர்வீக மதம், வைதீக இந்து மதம், தேரவாதப் பௌத்தம், மகாயான பௌத்தம் என்பன அக்காலத்தில் முரண்பாட்டுக்குரிய மதங்களாக இருந்தன. தேரவாதப் பௌத்தத்திற்கும் மகாயான பௌத்தத்திற்கும் உள்ள முரண்பாடு தத்துவார்த்தப் போர், ஆள் கடத்தல் தீ வைத்தல் என்று ஒருபுறம் நடந்து கொண்டிருந்தபோது, ஈழத்தின் பூர்வீக மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் இடையிலான ஒரு தீவிர முரண்பாடு இருந்திருக்க வேண்டும். ஆனால் அனுராதபுரக் காலத்தில் வைதீகப் பிராமணர்கள் பௌத்தத்துடன் சமரசம் செய்துகொண்டு பௌத்த சங்கத்திற்கும் பௌத்த விகாரைகளுக்கும் தானமும் நன்கொடைகளும் வழங்கிய செய்திகளை அக் காலத்தைய கல் வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. கி.மு. 103-102 நூற்றாண்டில் தெற்கே உருகுணையிலிருந்த தீசன் என்ற பிராமணன் அனுராதபுர மன்னனான




எல்லாளன் ஆட்சிப் பிரதேசம்

வட்ட காமினிக்காக தமிழர்களை எதிர்த்துப் போரிட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. உண்மையில் ஆரிய மதங்களான வைதீக இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் எதிரான ஈழத்து பூர்வீக மதத்தைக் கடைப்பிடித்த சமூகக் குழுக்களின் எதிர்ப்புணர்வால் ஏற்பட்ட எழுச்சியின் விளைவாக தோற்றம் பெற்ற அரசாகவே சேன(ன்) குந்திக(ன்) அரசைப் பார்க்க வேண்டும்.

### எல்லாளன் அல்லது ஈழராஜா

சேன, குந்திகனது ஆட்சிக்குப் பின் அநுராதபுரத்தை ஆட்சி செய்த பெரிய தமிழ் மன்னன் எல்லாளனாகும். இவனை சோழ படையெடுப்பாளனாகக் குறிப்பிடும் மகாவம்சம் இவன் நீதி தவறாமல் பௌத்த மதத்தையும் அரவணைத்துக் கொண்டு 44 வருடம் (கி.மு. 145-101) ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகிறது. அனுராதபுரத்தை அதிக காலம் ஆட்சி செய்தவன் என்ற பெருமைக்குரியவன் என்று குறிப்பிடப்படும் இவனது நீதி தவறாத ஆட்சி பற்றிய பல கதைகளையும் மகா வம்சம் குறிப்பிடுகின்றது. இந்த எல்லாளனுடைய பூர்வீகம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் தமிழில் ஈழராஜா என்று அழைக்கப்பட்டதையே பாளி மொழியில் ஏலரா (எல்லாளன்) என்று அழைத்ததாக ஒரு ஆய்வை முன்வைத்திருக்கின்றார்*(6)*. உண்மையில் எல்லாளனை தமிழகத்தில் இருந்து வந்த சோழப் படையெடுப்பாளனாக பார்ப்பதை விட அனுராதபுரத்தில் வாழ்ந்த திராவிடச் சமூகக் குழுவில் இருந்து தோற்றம் பெற்ற தமிழ் மன்னனாகப் பார்ப்பதே பொருத்தமானதாகும். மகாவம்சம் சிங்கள பௌத்தர்களின் மாபெரும் மன்னனாகச் சித்தரிக்கும் துட்டகாமினி (கைமுனு) கூட 24 வருடங்கள்தான் அனுராதபுரத்தை ஆட்சி செய்துள்ளான. ஆனால் எல்லாளன் 44 வருடங்கள் ஆட்சி செய்துள்ளான். அவனது ஆட்சிக்கெதிராக அனுராதபுரத்தில் எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை. வரலாற்றைத் திரித்துக் கூறிய மகாவம்சத்தால்கூட அவனது ஆட்சியைப் பற்றி ஒரு சிறு குறை கூடச் சொல்ல முடியவில்லை. இவன் பௌத்த மதத்திற்கு தனது முழுமையான ஆதரவை அளித்த அதே நேரம் தன்னுடைய பழைய மதத்தை மறக்கவில்லை என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இந்தப் பழைய மதத்தை சிலர் வைதீக இந்து மதமாகக் காட்ட முனைந்துள்ளனர். ஆனால் எல்லாளன் அனுராதபுரத்தில் வாழ்ந்த திராவிட சமூகக் குழுவிலிருந்து தோற்றம் பெற்ற ஒரு தமிழ் மன்னன் என்பதை ஏற்றுக் கொண்டால் அவன் கடைப்பிடித்த மதமும் பூர்வீக இந்து மதம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.


1. சி.க.சிற்றம்பலம் தமிழர் பற்றிக் கூறும் ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்கள் (தமிழோசை - 1988)
2. ப. புஸ்பரத்தினம்
3. ப. புஸ்பரத்தினம்
4. S.seniviratne - The Barata & Case of Community Intergration in Early History Sri Lanka 1985
5. சி. க. சிற்றம்பலம் (த. ப. கூ. ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்கள்)
6. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்.


- நக்கீரன்